Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2028 கார்த்திகை 12 வெள்ளிக்கிழமை 28-11-1997 UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 02

## காணாமற்போனவர்களில் அனேகமாக அனைவருமே கொல்லப்பட்டுவிட்டனர்!

### நேற்றைய அறிக்கையில் மன்னிப்புச் சபை கருத்து

லண்டன், நவ. 28

யாழ்ப்பாணத்தில் கடந்த 18 மாதங்களில் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் 'காணாமல் போன' சுமார் அறுநூறு பேரில் அனேகமாக அனைவரும் தடுப்புக்காவலில் இருந்தபோது சித்திரவதை காரணமாகக் கொல்லப்பட்டனர் அல்லது வேண்டுமென்றே படுகொலை செய்யப்பட்டனர் என்ற தீர்மானத்துக்கு அண்மையில் ஸ்ரீலங்காவுக்கு விஜயம் செய்த சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள் வந்துள்ளனர்.

ஸ்ரீலங்காவில் காணாமற் போனோர் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து விசாரிப்பதற்காக வருகை தந்த சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள் குழு ஒன்று கடந்த ஓகஸ்டில் யாழ்ப்பாணத்துக்கும் நேரில் வருகை தந்திருந்தது.

அந்தக் குழுவின் வருகையை அடுத்து ஸ்ரீலங்கா நிலைமை குறித்து 16 பக்க அறிக்கை ஒன்றை அக்குழுவின் லண்டன் தலைமையகம் நேற்றுக்காலை விடுத்தது.

''யாழ்ப்பாணத்தில் பரவலாக இடம்பெறும் 'காணாமற்போதல்' விவகாரம் குறித்து

(8ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களின் அபிலாஷைகளை தீர்வுப்பொதி தொட்டு நிற்கவில்லை!



## மாவீரர் தின உரையில் பிரபாகரன்

யாழ்ப்பாணம், நவம்பர் 28

**தமிழரின் அடிப்படை தேசிய அபிலாஷை எதையும் தீர்வுப் பொதி தொட்டு நிற்கவில்லை. தமிழரின் தேசிய பிரச்சினையை நீதியான முறையில் சமாதான வழியில் தீர்த்து வைப்பதற்கான அரசியல் நேர்மையும் உறுதியும் சந்திரிகா அரசிடம் கிடையாது**

**விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மாவீரர் தினத்தை முன்னிட்டு நேற்று நிகழ்த்திய உரையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

அவரின் உரை முழு விவரம் வருமாறு;

என் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய இனிய தமிழீழ மக்களே!

இன்று மாவீரர் நாள். எமது இன விடுதலைக்காக தமது இன்னுயிரை ஈகம் செய்து எமது இதயமெல்லாம் நிறைந்து நிற்கும் எம் உயிர்த் தியாகிகளை நாம் நினைவு கூர்ந்து கௌரவிக்கும் புனித நாள்.

[7 ஆம் பக்கம் பார்க்க]

## மாவீரர் நாள் நிகழ்வுகள்

வவுனியா, நவ. 28

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் நாள் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது என்று ''புலிகளின் குரல்'' தெரிவித்தது.

நேற்று மாலை 5.11 க்கு விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரன் மாவீரர் உரையை நிகழ்த்தியதை யடுத்து. 6.05 மணிக்குநினைவொலி எழுப்பப்பட்டது. 6.06 க்கு அகவணக்கம் செலுத்தப்பட்டதையடுத்து 6.07 க்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது.

கிளிநொச்சி கனகபுரத்தில் உள்ள மாவீரர் துயிலுமில்லத்தில் விடுதலைப் புலிகளின் தளபதி பால்ராஜ்—

முள்ளியவளையில் உள்ள மாவீரர் துயிலுமில்லத்தில் கடற் புலிகளின் மகளிர் பிரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னிப்புச் சபை அறிக்கை: பாரபட்சம் என்கிறது அரசு

கொழும்பு, நவ 28

''லண்டனில் தலைமை அலுவலகத்தைக் கொண்டுள்ள சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள 16பக்க அறிக்கை பாரபட்சமானது. சிக்கலான பிரச்சினைகளை மன்னிப்புச் சபை பாரதூரமானதாகக் கருதவில்லை.''

இப்படி இலங்கை வெளியுறவு அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இலங்கையில் ஆள்கள் காணாமல் போவது தொடர்பாக அரசுக்கு எதிராக வெளியான செய்திகளைச் சரியாகப் பரிசீலனை செய்யாமல் மன்னிப்புச்சபை அவற்றுக்கு முக்கியத்துவம்கொடுத்துள்ளது.

மன்னிப்புச்சபைஇச்செய்திகள் குறித்து முக்கியத்துவம் கொடுத்துள்ள அதேவேளையில் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளைக் கவனத்தில் கொள்ளவில்லை என்றும் வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது.

(இ-9)

## பத்திரிகைச் சுதந்திரம் மதிக்கப்பட வேண்டும்!

### பல்கலை. மாணவர் விடுவிப்பு வைபவத்தில் தளபதி உரை

யாழ்ப்பாணம், நவ. 28

''ஜனநாயக நாட்டில் பத்திரிகைகளுக்குரிய சுதந்திரம் மதிக்கப்பட வேண்டும்.

-இவ்வாறு கூறினார் வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பி. பலகல்ல.

கடந்த சனிக்கிழமை சுதுமலைப் பகுதியில் வைத்துக் கைதான இரு பல்கலைக்கழக மாணவர்களைப் பலாலியில் வைத்து நேற்று விடுவித்த சமயம் அங்கு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

சுந்தரலிங்கம் ஜதீஸ்குமார், இராசலிங்கம் சசிகரன் ஆகிய இந்த இருவரும் நேற்று அவர்களின் பெற்றோர்கள், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமைப பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ், மாணவ ஆலோசகர்கள் ஆகியோர் முன்னிலையில் விடுவிக்கப்பட்டு, பெற்றோரிடமும் பல்கலைக்கழக நிர்வாகத்தினரிடமும் ஒப்படைக்கப்பட்டனர்

அங்கு உரையாற்றுகையில் மேஜர் ஜெனரல் பலகல்ல கூறியதாவது:-


(8 ஆம் பக்கம் பார்க்க)



மேஜர் ஜெனரல் பலகல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 22 — 10 — 1945

உதிர்வு: 29 — 10 — 1997

## அமரர் நாகரத்தினம் செல்வரத்தினம்

(முன்னாள் மாகாணப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்)

என்றும் எமது நினைவை விட்டு அகலாத எமது முன்னாள் மாகாணப் பணிப்பாளர் நாகரத்தினம் செல்வரத்தினம் அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்!

நிறைவேற்றுப் பொறியியலாளரும்,
அலுவலர்களும்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை, பளை,

(51444)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி கதிர்காமன் (செல்லத்துரை)

(இளைப்பாறிய இறைவரித் திணைக்கள வரிமதிப்பாளர்)

முகமாலை, இந்திராபுரம் இல. 67இல் வசித்த சின்னத்தம்பி கதிர்காமன் 26-11-97 இல் காலமாகிவிட்டார்.

இவர் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி - நாச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்புமகனும், வசந்தமாலா (பேபி) வின் அன்புக் கணவரும், ஜனனி, தாரிணி, செந்தூரன், யாழினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அ. றொபின்சனின் (மதுவரிஇலாகா, கந்தளாய்) அன்பு மாமனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

இல. 67, இந்திராபுரம்,
முகமாலை, பளை.

(சி/2200)

## அருட்செல்வி செலின் அலேஸ்பிள்ளை

திருக்குடும்பச் சபையைச் சேர்ந்த அருட்செல்வி செலின் அலேஸ்பிள்ளை அவர்கள் 27-11-1997 அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் திருவுடல் நாளை (29-11-97) சனிக்கிழமை காலை 8-00 மணிக்கு (புதிய நேரம்) யாழ். திருக்குடும்பக் கன்னியர் மாகாண இல்லத்திலிருந்து புனித மரியாள் பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
சகோ. எமிலியானா

திரு. கு. மாகாண இல்லம்,
யாழ்ப்பாணம்.

(51456)

## திருமதி அரியநாயகம் சுவாமிநாதன்

(இளைப்பாறிய ஆசிரியை)

சாவகச்சேரி, நுணாவில் மேற்கைச் சேர்ந்த திருமதி அரியநாயகம் சுவாமிநாதன் 1997.11.26 ஆந் திகதி புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற திரு. தனிபுவிசிங்கம் சுவாமிநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பாலச்சந்திரன் (பணிப்பாளர், யாழ்ப்பாணக் கல்லூரி வெளிவாரிப் பட்டப்படிப்புப் பிரிவு) சந்திரமணி, அரியமணி ஆகியோரின் பாசமிகு தாயரும், இராசமந்திரி (ஓய்வுபெற்ற லிகிதர், சாமுவேல் சன்ஸ் கொம்பனி லிமிடெட் யாழ்ப்பாணம்) V. K. S. நவரத்தினம் (பிரதேச செயலகம், தென்மராட்சி, சாவகச்சேரி) கிறேஸ் நிர்மலா தேவி (யாழ்ப்பாண சர்வகலாசாலை) ஆகியோரின் மாமியாரும், ஸ்ரீ ஜெயனி, ஜெயரூபன், சாந்தரூபன் ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 1997.11.27-ந் திகதி வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற்று சாவகச்சேரி தென்னிந்தியத் திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
V. K. S. நவரத்தினம்
(மருமகன்)

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(51445)

## திருடர்கள் கைவரிசை

அரியாலை, நவ. 28

ஈச்சமோட்டைப் பகுதியில் நேற்றிரவு நான்கு வீடுகளுக்குள் திருடர்கள் புகுந்து தங்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

ஈச்சமோட்டை விதானையார் வீதியில் உள்ள வீடு ஒன்றினுள் புகுந்த திருடர்கள் அங்கு நித்திரையில் இருந்த பெண்ணின் முகத்தில் ஈரச்சாக்கினைப் போட்டு கழுத்தில் இருந்த சங்கிலி மற்றும் நகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

அன்றிரவு ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் உள்ள வீடு ஒன்றினுள்ளும் திருடர்கள் புகுந்து அலுமாரிக்குள் இருந்த தங்க நகை மற்றும் பணம் என்பனவற்றைத் திருடியுள்ளனர்.

இப்பகுதியில் மற்றொரு வீட்டினுள் புகுந்த திருடர்கள் குசினிக்குள் சுடுதண்ணீர் போத்தலுக்குள் இருந்த தேநீரை எடுத்து அருந்திவிட்டுச் சென்றுள்ளனர். இன்னுமொரு வீட்டில் திருடர்கள் புகுந்ததும் வீட்டுக்காரர்கள் சத்தம் எழுப்பவே அவர்கள் தப்பிவிட்டனர்.

நகரை அண்டிய பகுதிகளில் நாளாந்தம் அதிகரித்து வரும் திருட்டுச் சம்பவங்களால் மக்கள் நிம்மதி இழந்துள்ளனர். இராப்பொழுதுகளை உறக்கம் இன்றிக் கழிக்கின்றனர். (ஐ-17)

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், நவ. 28

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கும், உதைபந்தாட்ட மத்தியஸ்தர்சங்கமும் இணைந்து உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பயிற்சி வகுப்பொன்றினை நடத்தவுள்ளன.

பயிற்சி வகுப்பின் ஆரம்ப வைபவம் நாளை சனிக்கிழமை காலை 9 மணியளவில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. ஆர்வமுள்ள யாவரையும் இப்பயிற்சிக்கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு மேற்படி ஏற்பாட்டுக் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ-ரீ)

## 22 அரபு நாடுகள் இணக்கம்

கெய்ரோ, நவ. 28

அரபு நாடுகளில் தாக்குதல் நடத்தியதற்காகத் தேடப்பட்டு வரும் தீவிரவாதிகளை நாடு திருப்பி அனுப்பும் திட்டத்தை அங்கீகரிப்பது என 22 அரபு நாடுகளில் நீதித்துறை அமைச்சர்கள் முடிவு செய்துள்ளனர்.

பயங்கரவாதத்தை ஒடுக்கும் ஒரு முயற்சியாகவே இந்த உடன்பாடு காணப்பட்டிருக்கிறது.

எகிப்திய தலைநகர் கெய்ரோவில் நடைபெற்ற அரபு நாடுகளின் நீதித்துறை அமைச்சர்களின் மாநாட்டில் இந்த உடன்பாடு எட்டப்பட்டது. (ஐ)

## மருத்துவ பரிசோதனை முகாம்

வடமராட்சி, நவ. 28

நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையில் வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் இன்று வெள்ளிக்கிழமை மருத்துவப்பரிசோதனை முகாம் நடைபெறவுள்ளது.

மாணவர்களுக்கான இம் மருத்துவப் பரிசோதனை முகாமில் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ் கதிரைவேற்பிள்ளை தலைமையிலான மருத்துவக் குழு மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ளும். அத்துடன் ''நீரிழிவு நோயின் முற்காப்பு நடவடிக்கை'' பற்றிய கருத்தரங்கும் இடம்பெறும். (ஐ-173)


எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்!

★ தேடினேன் வந்தது
★ அட்ராசக்கை அட்ராசக்கை
★ காதல்பள்ளி ★ ரட்சகன்

எமது புதிய ஓடியோ CD வெளியீடுகள்!

★ பெரியமனுசன்
★ தினந்தோறும்
★ ஜானகிராமன்

பழைய பாடல்கள் ஓடியோ CD யில் வெளிவந்துள்ளன

★ N. S. கிருஷ்ணன், T. A. மதுரம் பாடல்கள்
★ திருச்சி லோகநாதன் என்றும் இனிமை
★ P. B. சீனிவாசனின் நினைவில் நீங்காத பாடல்கள்
★ M. G. R. தத்துவப் பாடல்கள்
★ கண்ணதாஸன் பாடல்கள்
★ சீர்காழி கோவிந்தராஜனின் தத்துவப் பாடல்கள்
★ T. R. மகாலிங்கம் பாடிய சிறந்த பாடல்கள்
★ C. S. ஜெயராமனின் காலத்தால் அழியாத கானங்கள்
★ சிவாஜியின் சோகப் பாடல்கள்
★ என்றும் ஏ. எம். ராஜா, ஜிக்கி பாடல்கள்
★ P. சுசிலாவின் பாடல்கள்
★ கண்டசாலாவின் நினைவில் நின்றவை
★ K. J. ஜேசுதாஸின் சிறந்த பாடல்கள்
★ S. P. பாலாவின் ஹிட்ஸ்
★ இன்னும் பல பழைய பாடல்கள்

இவையனைத்தும் ஓடியோ CD யில் வெளிவந்துள்ளன.

சுப்பஸோ வீடியோ
100 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/2199)



ஆண்டு 4 புலமைப்பரிசில் - 1998
மாதிரிப் பரீட்சை - 4 இல்
அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள்

★ சகாதேவன் விதூஷன் — 196 புள்ளி
(சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)
★ சிவராஜசுந்தரம் கஸ்தூரி — 189 புள்ளி
(ஆனைப்பந்தி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம்)
★ கதிரவேல் பூர்ணிமா — 189 புள்ளி
(யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயம்)
★ குணநாதன் மயூரி — 176 புள்ளி
(ஆனைப்பந்தி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம்)
★ ரவிந்திரராஜா நிஷா — 174 புள்ளி
(சென். பெனடிக்ற் வித்தியாலயம்)
★ குமாரசாமி சாலினி — 173 புள்ளி
(ஆனைப்பந்தி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம்)

இவர்களுக்கு எமது பாராட்டுக்களுடன் பரிசில்களும் வழங்கப்படும்.

அடுத்த மாதிரிப் பரீட்சை - 5
30-11-1997 ஞாயிறு காலை 9-00 மணி

புதிய நாவலர் கல்வி நிலையம்
நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(51454)



ஆண்டு 6
புதிய மாணவர் அனுமதி-1998

புதிய மாணவர்களுக்கான அனுமதிப் பரீட்சை 14 — 12 — 97 அன்று கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் 05 — 12 — 97-க்கு முன்பு பெற்று விண்ணப்பிக்கவும்.

க. சிவாஜி
அதிபர்
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
சுன்னாகம்.

(சி/2197)



சிநேகபூர்வ
உதைபந்தாட்டப் போட்டி

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கந்தரோடை, சுன்னாகம்
எதிர்
யா/மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்

பங்குபற்றும் குழுக்கள்:- 1 ஆம் அணி, 2 ஆம் அணி

காலம்: 29 — 11 — 97 சனிக்கிழமை
பி. ப. 2.00 மணி (புதிய நேரம்)

இடம்: யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானம்,

பிரவேசம் ரூபா: 10

பழைய மாணவர் சங்கம்,
கந்தரோடை,
சுன்னாகம்.

(சி/2169)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் பொதுநூலகம்

## இந்திய அரசியல் குழப்ப நிலை நீடிப்பு

# அரசுக்கு ஆதரவை உடனடியாக விலக்காமல் இழுத்தடிக்க காங்கிரஸ் செயற்குழு முடிவு

## காரசாரமான விவாதம்

புதுடில்லி, நவ. 28

ஐக்கிய முன்னணி அரசுக்கு வெளியே இருந்து வழங்கி வரும் ஆதரவைத் தொடருவதா விலக்குவதா என்பதைத் தீர்மானிப்பதற்கென்று நேற்று முன்தினம் மாலை கூட்டப்பட்ட காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் காரசாரமான விவாதம் இடம்பெற்றதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தி.மு. கவை நீக்குவதில்லை என்ற முடிவை காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரிக்கு பிரதமர் ஐ.கே. குஜ்ரால் எழுத்து மூலமாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து தமது கட்சியின் நிலைப்பாடு பற்றி இறுதி முடிவு எடுப்பதற்காகக் கூட்டப்பட்ட இக் கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர்கள் இரு அணியாகப் பிரிந்து நின்று காரசாரமான விவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஐக்கிய முன்னணிக்கு அளித்து வரும் ஆதரவை உடனடியாக நீக்கிவிட்டு ராஜீவ் காந்தியை மையமாக வைத்து சோனியாகாந்தி மூலம் பிரசாரம் செய்து பொதுத் தேர்தலில் வெற்றி பெறலாம் என்று ஒரு தரப்பினரும் —

அரசியலைப் பொறுத்தவரை ராஜீவ் அனுதாப ஆயுதம் இரண்டாவது முறையாகவும் பயன்படாது. ராஜீவின் படுகொலை கட்சியை இன்னொரு தேர்தல் வெற்றிக்கு இட்டுச் செல்லாது. ஏற்கனவே பல ஊழல் குற்றச்சாட்டுக்களில் சிக்கியுள்ள காங்கிரஸ் தற்போது பொறுப்பற்ற கட்சி என்றும் பெயர் எடுத்துள்ளது. மக்கள் புதிதாக நம் மீது கோபம் கொண்டுள்ளனர் என்று கட்சியின் மூத்த தலைவர்கள் மறுதரப்பிலும் வாதிட்டனர்.

நமது கட்சியின் ஓர் அணியினர் பாரதீய ஜனதாக் கட்சியுடன் இணைகின்ற ஆபத்து உண்டு. இதனால் மத்தியில் பாரதீய ஜனதா ஆட்சிஅமைய நாமே வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தவர்களாவோம் என்றும் மூத்தகாங்கிரஸ் பிரமுகர்கள் கூறியுள்ளனர்.

இத்தகைய காரசாரமான விவாதங்களை அடுத்து கட்சித் தலைவர் முடிவு ஒன்றை எடுக்கமுடியாமற் போனதாகவும் —

ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவை விலக்குவது என்றும் ஆனால் அதற்காக அரசுக்கு காலக்கெடு எதனையும் விதிப்பதில்லை என்றும் முடிவு செய்து இழுத்தடிக்கும் போக்கைக் கடைப்பிடிக்கத் தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

தற்போதைய அரசியல் குழப்ப நிலையில் ஐக்கிய முன்னணியுடன் மீண்டும் சமரசம் செய்து கொள்ள வாய்ப்பை ஏற்படுத்து முகமாகவே இத்தகைய இழுத்தடிக்கும் போக்கைக் கடைப்பிடிக்க காங்கிரஸ் செயற்குழு முடிவு செய்திருப்பதாக அவதானிகள் தெரிவித்தனர். (ஐ)

### தி.மு.கவை விலக்கும் கோரிக்கை:

## ஐக்கிய முன்னணி மீண்டும் நிராகரிப்பு

புதுடில்லி, நவ. 28

ஜெயின் ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தை மத்திய அரசில் இருந்து நீக்குமாறு இரண்டாவது முறையாகவும் காங்கிரஸ் கட்சி விடுத்த கோரிக்கையை ஐக்கிய முன்னணி நிராகரித்து விட்டது.

நேற்று முன்தினம் டில்லியில் நடந்த காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தின் முடிவில் தமது கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தி பிரதமர் குஜ்ராலுக்கு கடிதம் எழுதுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

கட்சியின் இறுதிக் கோரிக்கை அடங்கிய கடிதம் பிரதமர் குஜ்ராலுக்கு உடனடியாகவே அனுப்பப்பட்டது.

ஐக்கிய முன்னணியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த தயாராக இருப்பதாகவும் காங்கிரஸ் அக் கடிதத்தில் கோடிகாட்டியிருந்தது.

ஆனால் காங்கிரஸின் இறுதிக் கோரிக்கையை ஐக்கிய முன்னணி நிராகரித்து விட்டது.

ஆட்சியில் நீடித்தாலும், கவிழ்ந்தாலும் தி.மு.க வுடனேயே ஐக்கிய முன்னணி பயணிக்கும் என்று கட்சியின் பேச்சாளர் ஜெய்பால்ரெட்டி திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார். (ஐ)

## காங்கிரஸின் புதிய யோசனை

புதுடில்லி, நவ. 28

தி.மு. கவை ஐக்கிய முன்னணியில் இருந்து வெளியேற்றுமாறு கேட்டு காங்கிரஸ் கட்சி கடைசியாகப் பிரதமர் குஜ்ராலுக்கு அனுப்பிய கடிதத்தில் புதிய யோசனை ஒன்றையும் அக்கட்சி வெளியிட்டிருக்கிறது.

நீதிபதி ஜெயின் விசாரணைக் குழுவின் இடைக்கால அறிக்கையின் உண்மைத் தன்மையை நிரூபிக்க மூன்று நீதிபதிகள் கொண்ட ஒரு குழுவையோ அல்லது நாடாளுமன்ற விசாரணைக்குழுவையோ அமைக்கலாம். அக் குழு தனது பணியை முடிக்கும்வரை ஐக்கிய முன்னணியில இருந்து தி.மு.க.விலகி இருக்க வேண்டும்; தி.மு.க. மீது குற்றம் இல்லை என அக் குழு தீர்ப்பளித்தால்மீண்டும் அது ஐக்கிய முன்னணியில் சேர்ந்து கொள்ளலாம் என்பதே காங்கிரஸ் தெரிவித்த யோசனை ஆகும்.

ஆனால் இந்த யோசனையையும் ஐக்கிய முன்னணி நிராகரித்து விட்டது.

இந்த யோசனையை ஐக்கிய முன்னணியின் மத்திய குழு விவாதித்தது. தி.மு.க. தொடர்பான தனது நிலையைதொடர்ந்தும் கடைப்பிடிப்பதில் உறுதியாக இருப்பதாக— ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன

இத்தவேளை இந்தயோசனை தொடர்பாக ஐக்கிய முன்னணியின் பதிலுக்காகக் காத்திருக்கப் போவதாக காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது. (ஐ)

## நக்கீரன் கோபாலுக்கு அழைப்பாணை

சந்தன மரக் கடத்தல் வீரப்பன் தொடர்பாக அறிந்துள்ள அனைத்து தகவல்களையும் தெரிவிக்கும் படி கேட்டு 'நக்கீரன்' சஞ்சிகை ஆசிரியர் ஆர். ஆர். கோபாலுக்கு தமிழக பொலீஸ் அழைப்பாணை விடுத்துள்ளது.

ஈரோடு காவல்துறை கண்காணிப்பாளர் திருமதி ஷினா அகர்வால் சட்டப்படியான இந்த அழைப்பாணையை விடுத்துள்ளார்.

வீரப்பன் தொடர்பான தகவல்களைத் தம்மிடமோ அல்லது கர்நாடக தமிழக கூட்டு அதிரடிப்படைத் தலைவர் காளி முத்துவிடமோ தெரிவிக்குமாறு அவர் பணித்துள்ளார்.

கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாகத் தேடப்பட்டுவரும் ஒரு குற்றவாளி தொடர்பானவிவரங்களைப் பொலிஸாருக்குத் தெரிவிக்கவேண்டியது சட்டப்படியான கடமை ஆகும். அவ்வாறு தகவல்தர மறுப்பது சட்டப்படி குற்றமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## அரபாத் பற்றி இஸ்ரேல் பரப்பும் வதந்திகள்

ரெல் அவிவ், நவ. 28

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யஸீர் அரபாத் உடல் நடுக்க நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்ற வதந்தி இஸ்ரேலில் பரப்பப்பட்டுவருவதாகப் பலஸ்தீன வட்டாரங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இஸ்ரேல் பிரதமர் நத்தனியாகு வேண்டும் என்றே இத்தகைய வதந்திகளைப் பரப்பி வருவதாக யஸீர் அரபாத் தெரிவித்து வருகிறார்.

பலஸ்தீன மக்களினதும், விடுதலை அமைப்புக்களினதும் நன் மதிப்பைப் பெற்றுத் திகழும் யஸீர் அரபாத்துக்குப் பின் அவரது இடத்தை நிரப்பப்போவது யார் என்ற கேள்வி பலஸ்தீன மக்கள் மத்தியில் இப்போதே எழுந்துள்ளதாகக் கூறப்படுகிறது. (ஐ)


## யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்

150 ஆவது ஆண்டு நிறைவுவிழா

(1848 - 1998)

## ஆலோசனைக் கூட்டம்

காலம்:- 1997 - 11 - 30 ஞாயிறு மு. ப. 9-00 மணி (இல. நேரம்)

இடம்:- பாடசாலை மண்டபம்.

மேற்படி ஆலோசனைக் கூட்டத்திற்கு பெற்றோர், முன்னாள் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் நலன்விரும்பிகள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஐ. துரைராஜா (அதிபர்)

யா/வண். நாவலர் ம. வி

யாழ்ப்பாணம். (51442)



## கண்ணீர் அஞ்சலி

### அலோசியஸ் பஸ்ரியாம்பிள்ளை

[ இயன் வைத்தியர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் ]

அவர்களது மறைவினால் துயருறும் அவரது மனைவி

### திருமதி மரியமலர்

(தாதிய உத்தியோகத்தர், போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்)

அவரது பிள்ளைகள் யாவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதிய உத்தியோகத்தர்கள்

போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

[51449]


## சமய சந்நிதியில்

சாவகச்சேரி கச்சாய் வீதி நாவலடிப்பிள்ளையார் ஆலய விசேட பூஜையும் மரம் நாட்டுவிழாவும் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

ஆலயத்தில் விசேட பூஜையையடுத்துதென்மராட்சி அப்பர் அருள்நெறி மன்றத்தின் பஜனைப்பாடல்இடம்பெறும் டாக்டர் வ. சின்னப்பு ''புஷ்ப அர்ச்சனையும் மரம் நாட்டு விழாவின் சிறப்பும்'' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையின் விசேட உரையும் இடம் பெறும். (ஜ-117)

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு அருள் மிகுஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும்வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு உரும்பிராய் கிழக்கு மறவனூர் ரி. எம். வாசகரின் ''பக்திப் பாடல்கள்'' பக்கவாத்திய சகிதம் இடம்பெறும் [illegible] இராமநாதன் அறிமுகவுரையை நிகழ்த்துவார்.

### வன்னியில் இருந்து வந்து

## குருநகரில் காத்திருக்கும் யாழ். பல்கலை மாணவர்கள்

மல்லாகம், நவ. 28

வன்னியில் இருந்து குடாக்கடல் ஊடாக குருநகருக்கு வந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாமல் கடந்த நான்கு நாள்களாக சீநோர் முகாமில் தங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கான கப்பல்சேவை தடைப்பட்டிருப்பதால் வன்னியில் தங்கியுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் குடாக்கடல் ஊடாக வள்ளங்களில் இங்கு வருகின்றனர்.

வன்னியில் இருந்து குருநகர் வருவோரை இரண்டு நாள்களுக்குள் விசாரணைகள் முடிந்து சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்க முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் அண்மைக்காலமாக இந்நிலை மாறி குருநகரில் உள்ள சீநோர் முகாமில் அவர்கள் பல நாள்கள் தங்கியிருக்க நேரிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போதிய வசதிகள் இல்லாத அந்த இடைத்தங்கல் முகாமில் பல நாள்கள் தங்கியிருப்பதால் இவர்கள் பல அசௌகரியங்களை அனுபவிக்க வேண்டி உள்ளது. (ஐ-86)

## சண்டிலிப்பாயில் மேலும் 650 பேருக்கு ரூ.5,000

சண்டிலிப்பாய், நவ. 28

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் மேலும் 650 குடும்பங்களுக்கு 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு விரைவில் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நிதி கிடைத்துள்ளதாகவும், விரைவில் கிராம அலுவலர் பிரிவுகள் ரீதியாக இக் கொடுப்பனவு வழங்கப்பட விருப்பதாகவும் சண்டிலிப்பாய் பிரதேசசெயலர் நா, வேதநாயகன் தெரிவித்தார்.

இதுவரை இப்பிரிவில் 4 ஆயிரத்து 838 பேருக்கு மீளக்குடியமர்வுக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ - 135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

100 கோழிகள் விடக்கூடிய இரு தட்டு புதிய கோழிக்கூடு. தொடர்பு: கு. சதானந்தன், 5/1, புகையிரத வீதி, நீராவியடி. [51438]

### மாதிரி வினாத்தாள்

3 ஆம் தவணைக்கான மாதிரிப்பரீட்சை வினாத்தாள்கள், ஆண்டு 6 முதல் 11 வரையான வகுப்புக்களுக்குரிய வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். Bitsmens கல்விநிலையம், மானிப்பாய். [49854]

### உடன் விற்பனை

பிறிமா புறோயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 29-11-97 சனிக்கிழமை பிறிமா பிறவுண் வெள்ளை பேட்டுக்குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், பிறிமா புறோயிலர் குஞ்சுகள் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (51383)

### இறைச்சிக் கோழி

புறோயிலர் Broiler கோழி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:இல.15,மெமோறியல் லேன், மானிப்பாய். [51439]

## பிரிவுபசாரம்

தென்மராட்சி, நவ, 28

தென்மராட்சி அதிபர் சங்கத்தினர் கோட்டக் கல்வி அலுவலகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ச. சின்னத்தம்பி, யோ. யோன்பிள்ளை ஆகியோருக்கு பிரிவுபசார விழாவினை கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்தினர்.

சங்கத் தலைவர் சி. துரைராசா தலைமையில் நடத்தப்பட்ட இவ் விழாவில் கோட்டக்கல்வி அலுவலர் இ. கணேசன், அதிபர்கள் செ. சுப்பிரமணியம், வே. பாலசுப்பிரமணியம், திருமதி வீரகத்தி உட்பட பலர் உரையாற்றினர். (ஐ-117)


ACCOUNTING
A/L 98 Day
★ Costing
★ வினாவிடை
ஆரம்பம்: 29-11-97
சனி 11 மணி
Mr. S. D J Sutharshan
1st - in - Com.
97 / 98
ஆரம்பம்: சனி 4-30
BOSCO INSTITUTE
25, RACCA ROAD,
JAFFNA.
(51390)



கலைக்கல்லூரி
கொடிகாம வீதி,
நெல்லியடி.
வடமராட்சியில்
Spoken Engl!sh
Mr. BRITTO
வெள்ளி 1-30 — 3-30
புதன் 3-30 — 4-30
நிர்வாகி
(51384)


உ

## நவாலி அட்டகிரி முருகன் தேவஸ்தான வழிபடுவோர் சங்கம்

மேற்படி சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினர்களும், புதிதாக சேர விரும்புபவர்களும் பொருளாளர் திரு. சி. சிவலிங்கத்திடம் நடப்பு ஆண்டுக்கான அங்கத்துவப் பணத்தை 15 - 12 - 97-க்கு முன்பாக செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(51436) செயலாளர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்: 21 — 02 — 1932

விண்ணில்: 30 — 10 — 1997

### அமரர் வேலுப்பிள்ளை மகேஸ்வரன்

(இளைப்பாறிய இலிகிதர், கச்சேரி)

திதி: 28—11-1997

அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், பாசத்தின் பிறப்பிடமாய், கடமையின் இருப்பிடமாய், தந்தைக்கு வரைவிலக்கணமாய் இருந்து எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள், அன்புத்தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அச்செழு,
நீர்வேலி

(51402)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் பெஞ்சமின் யோண்பிள்ளை

பிறப்பு: 17 — 07 — 1931

பிரிவு: 29 — 10 — 1997

''உயிர்ப்பும் உயிரும் நானே; என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்.''
அரு. 11:25

இவரது ஆன்ம சாந்திக்காக 28 - 11 - 97 வெள்ளிக்கிழமை பி.ப 5 மணிக்கு சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரது இறுதி நிகழ்வுகளிலும், அஞ்சலியிலும் பங்கு பற்றிய அருட் தந்தையர்களுக்கும், அருட் சகோதரர்களுக்கும், அருட்சகோதரிகளுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள், மற்றும் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள்.

மனைவி, பிள்ளைகள்.

சில்லாலை மேற்கு,
பண்டத்தரிப்பு.

(51420)


## வடமராட்சி கிழக்கு விவசாயிகளுக்கு யூரியா

நெல்லியடி, நவ. 28

வடமராட்சி கிழக்கு விவசாயிகளின் நலன் கருதி யூரியா உரம் அடுத்த சில தினங்களில் வல்லிபுரக் கோயில் இராணுவ முகாம் பகுதியில் வைதது வழங்கப் படவுள்ளது.

அம்பன், குடத்தனை, நாகர் கோயில், செம்பியன் பற்றுப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கே யூரியா உரம் வழங்கப்படுமென புலோலி கமநல கேந்திர பெரும்பாக உத்தியோகத்தர் க. உருத்திரேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஐ-109)

## 31 ஆம் நாளில் நெஞ்சம் சுமக்கும் நினைவுகள்



அன்னை மடியில்: 22 — 10 — 1945

ஆண்டவன் அடியில்: 29 — 10 — 1997

### உயர்திரு நாகரத்தினம் செல்வரத்தினம்

[முன்னாள் வடமாகாணப் பணிப்பாளர்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை]

[B. Sc. [Eng.] Hon, M. Eng.Sc. Australia,
M. I. C. E [London], M. I E [SriLanka]


காலத்தால் அழியாக் காவியமாகி
நேசத்தில் எல்லாமாய் நிறைந்து
பாசப் பிணைப்புடன் எம்மை
வழி நடத்தி வாழ்விக்கும்
உங்கள் நினைவுகள் காலங்கள்
நகர்வதால் மறந்திடல் இல்லை
என்றும் பசுமையாய் எம்
நெஞ்சம் சுமக்கும் நினைவுகளாகும்.

உங்களையே நிதம் தேடும்:
மனைவி, பிள்ளைகள்

40/3, புகையிரத கிழக்கு ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[51431]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் கந்தையா செல்லத்துரை

(அப்பா அண்ணை)

மலர்வு: 18 - 10 - 1935

உதிர்வு: 29 - 10 - 1997

அன்பின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய் கடமையின் இருப்பிடமாய்
தந்தைக்கு எடுத்துக்காட்டாய் இருந்து
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

28-11-97 (வெள்ளி) இன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, மக்கள்.

''காஞ்சி இல்லம்''
சுதுமலை வீதி, தாவடி.

[51428]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் வாந்திபேதி பரவும் சாத்தியம் உண்டு

## சுகாதாரப் பணிப்பாளர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 28

தற்போது நாட்டில் வேகமாகப் பரவிவரும் வாந்திபேதி நோய் குடாநாட்டிலும் பரவக்கூடிய சாத்தியம் இருப்பதாக எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக வட பிராந்திய சுகாதார சேவைகள் பதில் மாகாணப் பணிப்பாளர் சு. தா. சிவபாதம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த செப்ரெம்பர் மாதம் சிலாபம் பகுதியில் வாந்திபேதி நோய் காணப்பட்டு அது இன்னும் பல இடங்களில் பரவி வருகிறது.

எமது பகுதியிலும் இந்நோய் பரவக்கூடிய சாத்தியம் உண்டு. எனவே இந்நோய் பற்றி பொதுமக்கள் அறிந்திருப்பது அவசியம்.

வாந்திபேதி விப்றியோ கொலறீ (Vibrio Cholerae) எனப்படும் பக்டீரியாவால் ஏற்படுகின்றது. தற்போது காணப்படும் இந்நோய் எல்ரோர் (Eltor) வகையைச் சேர்ந்ததாகும். நோய் அரும்பு காலம் 1 - 5 நாள்கள். இந்நோய்த் தொற்று ஏற்பட்டாலும் பலருக்கு நோய் அறிகுறிகள் காணப்படுவதில்லை.

சிலருக்கு சிறிய அளவு அறிகுறிகள் காணப்படும். இன்னும் ஒரு சிலருக்கு திடீரென தன்பாட்டுக்கு கடுமையான நீர்த்தன்மையான வயிற்றுப் போக்குக் காணப்படும்.

ஒரு நாளுக்கு 40 தடவைககு மேலும் தொடர்ந்து வாந்தியும் ஏற்படலாம். பச்சையரிசிக் கஞ்சி நிறத்திலும் மலம் காணப்படலாம். நீரிழப்புக் காரணமாக நோயாளி அறிவு மயங்கக்கூடும். தசைநார்ப்பிடிப்பு, சலம் போகாமை, பலம் குறைந்த நாடித்துடிப்பு, கண்கள் தாழ்ந்தும், தேகச்சூடு குறைந்தும் காணப்படும். உடன் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு உரிய சிகிச்சை அளிக்கப்படாதவிடத்து நோயாளி மரணம் அடைவார்.

நோயாளி ஒருவர் பொதுவாக 7-10 நாள்களுக்கு நோய்த்தொற்று உடையவராக இருப்பார். காவிகள் 2 - 3 வாரங்களுக்கு இந்நோய்க் கிருமி உடையவராக இருப்பார். மேலும் சில காவிகள் பல மாதங்களுக்கு கிருமிகளை உடையவராக இருப்பார். இந்நோயாளரில் சிலர் காவிகளாக இருப்பதால் இவ்வகை வாந்திபேதி கட்டுப்படுத்துவதில் சிரமம் ஏற்படுகின்றது

நோய்க் கிருமிகள் நோயாளி, காவி ஆகியோரின் மலத்துடன் வெளியேறுகின்றன.

உணவு, நீர் ஆகியவற்றின் மூலம் சுகதேகி ஒருவரின் உடலுள் சென்று நோயை ஏற்படுத்துகின்றது. நோயாளியின் மலம் — மண், நீர், கைகள், பாவிக்கும் சில பொருள்கள் ஆகியவற்றை மாசடையச் செய்கின்றன. இவற்றின் மூலம் உணவு மாசடைகின்றது. இதனைப் பரப்புவதில் இலையானும் இதில் முக்கிய பங்கு வகிக்கின்றது

தடுப்பு முறைகள்

★ நோய் அறிகுறி உடையவர்கள் போதிய அளவு நீராகாரம் அருந்துதல் வேண்டும்.

★ உடன் வைத்தியசாலைக்கு செல்லவேண்டும்.

★ யாவரும் மலகூடத்தையே பாவித்தல் வேண்டும். இல்லாதவிடத்து மலத்தைப் பாதுகாப்பாக நன்கு புதைத்தல் வேண்டும்.

★ எப்பொழுதும் கொதித்து ஆறிய நீரையே பருகவேண்டும்.

★ மலசலகூடம் சென்று வந்தபின்பு உணவு உண்ணுமுன், சமைக்குமுன், உணவு பரிமாறு முன் கைகளை நன்கு சவர்க்காரமிட்டுக் கழுவுதல் வேண்டும்.

★ உணவைப் பாதுகாப்பாக மூடி வைத்திருத்தல் வேண்டும்.

★ பழங்களை நன்கு கழுவி உண்ண வேண்டும்.

★ மரக்கறி வகைகளை நன்கு கழுவவேண்டும், நன்கு கழுவிய பின்னர் சமைத்து உண்ண வேண்டும்.

★ சுகாதாரமாக தயாரிக்கப்படாத குளிர்பானம், ஐஸ்கிரீம் ஆகியவற்றை உண்ணுதல் ஆகாது.

★ சுகாதாரக் குறைவான கடைகளில் தயாரிக்கப்படும், விநியோகிக்கப்படும் உணவுகளைத் தவிர்த்தல் நல்லது.

★ குளம், கேணி, வயற்கிணறு ஆகியவற்றில் நீந்துதலைத் தவிர்க்கவும்.

★ நோயாளியைப் பராமரிப்பவர்கள் உயர்தர தற்சுகாதாரம் பேணுதல் வேண்டும்.

★ நோயாளியுடன் தொடர்புடையவர்கள் வைத்திய ஆலோசனைப்படி சிகிச்சை பெற வேண்டும்.

★ வயிற்றோட்டம் காணப்படுமிடத்து சுகாதாரப் பகுதியினருக்கு அறிவிக்க வேண்டும்.

★ தனியார் வைத்தியர்களும் சுகாதாரப் பகுதியினருக்கு நோயறிவித்தல் செய்யவேண்டும்.

★ அசாதாரண வயிற்றோட்டம் காணுமிடத்து உங்கள் பகுதி சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்களின் ஆலோசனையைப் பெறவும். (ஐ)

## வடமராட்சியில் டிசெம்பர் 1 முதல் மலத்தியோன் விசிறும் பணி

வடமராட்சி, நவ. 28

வடமராட்சிப் பிரதேசத்தில் மலேரியா நோய் கூடுதலாகப் பரவியுள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கிராமங்களில் மலத்தியோன் தெளிக்கப்படவுள்ளது.

இதற்கென யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களம் 30 பெட்டி மலத்தியோனை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள துன்னாலைகிழக்கு, திக்கம், கற்கோவளம், செம்பியன்பற்று ஆகிய கிராமங்களில் உள்ள வீடுகளுக்கே மலத்தியோன் தெளிக்கப்படவுள்ளது

எதிர்வரும் முதலாம் திகதி மலத்தியோன் தெளிக்கும் பணி ஆரம்பமாகும் என பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்தது (ஐ-173)

## இலவச மூக்குக் கண்ணாடி

தென்மராட்சி, நவ. 28

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் கடந்த மாதங்களில் நடத்தப்பட்ட கண் சிகிச்சை முகாம்களில் மூக்குக் கண்ணாடி பெறுவதற்குச் சிபார்சு செய்யப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 50 பேருக்கு மூக்குக் கண்ணாடியை இலவசமாக வழங்கும் வைபவம் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு கழக அலுவலகத்தில் நடைபெறும்.

கழகத்தலைவர் லயன் பா. விஜயகுமார் தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் துரைசிங்கம் ரகு முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு மூக்குக் கண்ணாடிகளை வழங்குவார்.

மூக்குக் கண்ணாடி பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட 50 பேருக்கும் கழகத்தினால் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கழகச் செயலாளர் எம். கே. ஜீவதாஸ் தெரிவித்தார்.

(இ-117)

## கிராமசேவையாளர்களுக்கு புதிய அடையாள அட்டை

தென்மராட்சி, நவ. 28

யாழ். மாவட்டக் கிராம சேவையாளர்களுக்குப் புதிய உத்தியோகபூர்வ அடையாள அட்டைகள் மாவட்டச் செயலகத்தினால் வழங்கப்படவுள்ளன.

இந்த அடையாள அட்டைகள் இன்று வெள்ளிக்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் வழங்கப்படவுள்ளதாகவும் —

கிராம சேவையாளர்கள் தமது முன்னைய உத்தியோகபூர்வ அடையாள அட்டையை சமர்ப்பித்து புதிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளுமாறும் —

முன்னைய உத்தியோகபூர்வ அடையாள அட்டை இல்லாதவர்கள் அதற்கான காரணத்தை தெரிவிக்குமாறும் — யாழ். அரச அதிபர் சகல பிரதேச செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

(இ-117)

## பஸ் டிப்போவில் வாழைச்செய்கை

வடமராட்சி, நவ. 28

வட பிராந்திய போக்குவரத்துச்சபையின் பருத்தித்துறை டிப்போ ஊழியர்கள் டிப்போப் பகுதியில் வாழை பயிரிட்டுள்ளனர்,

டிப்போவுக்கு அருகில் உள்ள காணியில் ஊழியர்கள் ஒன்றிணைந்து அதிக எண்ணிக்கையில் வாழைகளைப் பயிரிட்டுள்ளனர்.

(ஐ-173)

## அத்தியடி அ. அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 28

அத்தியடி (ஜே-78) கிராம அலுவலர் பிரிவுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணி முதல் 10.30 மணி வரை ஆரியகுளம் சந்தி இராணுவ அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அப்பிரிவு கிராம அலுவலர் அறிவித்துள்ளார்.

(ஐ)

## பனம் கைப்பணி பொருள்களில் பூஞ்சணம் தடுக்கப்படும்

### பனை அபிவிருத்திச்சபை ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ. 28

பனையின் பாகங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட கைப்பணிப் பொருள்களில் பூஞ்சணம் படிவதைத் தடுக்க சல்பர் (கந்தகம்) புகையிடும் முறையை பனை அபிவிருத்திச் சபையின் தலைமைக் காரியாலயம் மேற்கொண்டுள்ளது

பனையின் ஓலை, நார் முதலியவற்றால் உருவாக்கப்படும் கைப்பணிப் பொருள்களில் மழை காலத்திலே பூஞ்சணம்படிந்து அவற்றின் அழகைக் குறைக்கிறது

இதனைத் தடுக்கும் பொருட்டே சல்பர் புகையில் 24 மணி நேரம் இக்கைப் பணிப் பொருள்கள் வைக்கப்படுகின்றன.

இதன் மூலம் இக்கைப் பணிப் பொருள்கள் எக்காலமும் பழுதடையாது நீண்ட காலம் இருப்பதுடன், புதுமெருகும் பெற்றுக் காணப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-ரீ)

## மழையால் விவசாயிகள் பாதிப்பு

நெடுந்தீவு, நவ. 28

நெடுந்தீவில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை காரணமாக விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

மழை காரணமாக விவசாயிகள் வெங்காயச் செய்கையை மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் ஏனைய உப உணவுப் பயிர்களை உற்பத்தி செய்ய முடியாதிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

(ஐ-111)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்: 19 — 11 — 1911

விண்ணில்: 29 — 10 — 1997

அமரர் சின்னர் சின்னத்துரை

(ஓய்வு பெற்ற சிறாப்பர், இலங்கை வங்கி, கொழும்பு.)

தங்கள் விண்ணுலக வாழ்வு
நல் வளம் பெற வேண்டிக்
கரம் கூப்பி உளமுருக எம்
கண்ணீர்ப் பூக்களைக்
காணிக்கையாக்குகின்றோம்.

—குடும்பத்தினர்

23, புதிய வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

(51430)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கதிரவேலு செல்வரட்ணம்

அன்னையின் மடியில்: 31 - 10 - 1925

ஆண்டவன் அடியில்: 28 - 11 - 1995

திதி: 05 - 12 - 1997

நல்ல துணைவனாய், அன்புத் தந்தையாய், நல் வழிகாட்டியாய் அறிவில் திகழ்ந்து எமக்கு நல்ல கல்வி ஊட்டி நல்வாழ்க்கையைத் தந்த எம்முடைய அன்புத் தந்தையின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பின் மனைவி பிள்ளைகள்,

ஜோசப் லேன்,
பம்பலப்பிட்டி.

(51157)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நெசவுசாலை இயங்குகிறது

வடமராட்சி, நவ. 27

கடந்த 10 வருடங்களாக இயங்காதிருந்த பளை கிழக்கு நெசவுசாலை மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

இந்த நெசவுசாலையை பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி அண்மையில் ஆரம்பித்து வைத்தார்.

ஆரம்ப வைபவத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் என். மகேந்திரன் கிராம சேவை அலுவலர் சி. சிவலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ஐ-173)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 08 — 06 — 1924



மறைவு: 09 — 12 — 1996

## திருமதி தாமோதரம்பிள்ளை கனகம்மா

திதி: 28—11—97 (வெள்ளிக்கிழமை)

அன்னையைப் போல் ஒரு தெய்வம் இல்லை
அவர் அடி தொழ மறந்தவர் எவரும் இல்லை
அம்மா என்று அழைக்காத உயிர் இல்லை
அம்மாவை வணங்காது உயர்வேது?

அம்மா எங்களை ஏங்கியழ வைத்து
இறைவனடி சேர்ந்து அமைதியில் வாழ்ந்திட
என்றென்றும் வாழ்த்துகின்றோம்.

மரணத்திலும் நேசிக்கும் இதயங்கள்:
அன்புக்கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

ப. புவனேஸ்வரி,
2ஆம் வட்டாரம்,
ஈசனா முற்றம்,
புங்குடுதீவு.

(51381)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## கோவிந்தபிள்ளை இராசமணி

[அரியாலை]

அன்னை மடியில்: 05 — 09 — 1917

இறைவன் அடியில்: 29 — 10 — 1997

அம்மா நீ வருவாய்; வருவாய் என்று
எதிர்பார்த்திருந்தோம்,
மல்லாவிதனில் காலன் உனைக் கவர்ந்தது ஏனோ!

அன்புப் பிள்ளைகளோடும், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடனும் குதூகலமாய் வாழும் காலத்தில் காலன் உங்களைக் கவர்ந்து சென்று விட்டானே! இனி யாரை நாம் அம்மா, அம்மா என ஆசையோடு அழைப்பது? எம்மை விட்டு நீங்கள் பிரிந்து விட்டாலும் உங்கள் கனிவான திருமுகமும், உங்கள் நினைவுகளும் என்றும் எமது நெஞ்சில் இனிய நாதமாக நிறைந்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தி அறிந்து உடன் வந்து துயர் துடைத்த அனைவருக்கும் எங்கள் நன்றிதனை நவில்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள்.

82/9, கச்சேரி கிழக்கு,
புகையிரத வீதி,
அரியாலை.

(சி/2194)

# பெற்றோர் தினம்

அளவெட்டி வடக்கு அ.மி.த.க. வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும், பெற்றோர் தினமும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் செ.மி. இளமுருகனார் தலைமையில் நடைபெறும்.

வலி.வடக்கு பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம் போல் முதன்மை விருந்தினராகவும், தெல்லிப்பழை கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஆ. கமலநாதன், ஓய்வு பெற்ற அதிபர் அ. விஸ்வநாதன், முன்னாள் அதிபர் திருமதி சி. கந்தையா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், அகதிகளுக்கான ஐ.நா. தூதரக வதிவிடப் பிரதிநிதி ஜோன் டிக்சன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

(ஐ-5)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 28

திருநெல்வேலி வடமத்தி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கலை இலக்கிய வட்டத்தினரால் மாதாந்தம் நடத்தப்படும் கருத்தரங்கு எதிர்வரும் 30ஆம் திகதி பிற்பகல் 3.30 மணியளவில் திருநெல்வேலி கலாசாலை வீதியிலுள்ள கலாமன்ற மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும், திருநெல்வேலி வடமத்தி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் போஷகருமான கலாநிதி எஸ். சிவலிங்கராசா தலைமையில் நடைபெறும்.

''காலத்தோடு அமைந்த நாடகம்'' என்னும் விடயம் பற்றி குழந்தை மா. சண்முகலிங்கம் கருத்துரை வழங்குவார்.

(ஐ-ரீ)

# சித்தாந்த பண்டிதர் தேர்வு

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ். சைவ பரிபாலன சபை நடத்தும் சைவ சித்தாந்தப் பண்டிதர் தேர்வு அடுத்த ஆண்டு மே மாதம் நடைபெறவுள்ளது. இதற்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் தினம் எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதியாகும்.

(ஐ)

# கோப்பாயில் பனம் விதை நடுகை

யாழ்ப்பாணம், நவ. 28

கோப்பாய் வடக்கு கிராம சேவையாளர் பிரிவுக்கு பனை அபிவிருத்திச் சபையினரால் 5 ஆயிரம் பனம் விதைகள் வழங்கப்பட்டுள்ளன.

இவை கோப்பாய் வடக்கு கிராம அலுவலர் எஸ். செல்வச்சந்திரன் தலைமையில் அண்மையில் நடப்பட்டுள்ளன.

(ஐ-ரீ)

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் தனது வைர விழாவை முன்னிட்டு அடுத்த மாதம் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

யாழ். மாவட்ட மட்டத்தில் விலகல் முறையில் இடம் பெறும் இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு விளையாட்டுக்கழகத் தலைவர் கேட்டுள்ளார்.

(ஐ-ரீ)


# விக்னா

## கல்வி நிறுவனம்

தமிழ்

திரு. லிங்கம்

98 - 9.00 மணி

99 - 10.00 மணி

ஆரம்பம்: 29-11-97 சனி

— நிர்வாகி

(51448)


# இதய அஞ்சலி

## திருமதி மேரி திரேசா சிவலிங்கம்

எமது முன்னாள் ஆசிரியை செல்வி சுபத்திரா அவர்களின் அன்புத்தாயார் திருமதி மேரி திரேசா சிவலிங்கம் அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன், அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றலுக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/கொட்டடி,
நமசிவாய வித்தியாலயம்.

(51447)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மேரி திரேசா சிவலிங்கம்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மேரி திரேசா சிவலிங்கம் 26-11-97 புதன் கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி வைத்திலிங்கம் ஜோர்ஜ் ஜோசபின் தம்பதிகளின் (ஆசிரியர்கள்) அன்பு மகளும், அன்ரன் சிவலிங்கத்தின் (SWORN Translator) அன்பு மனைவியும், லெஸ்லி (அமெரிக்கா), செல்வி விசிசுபத்திரா (ஆசிரியர் சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி லெஸ்லிமலிகா (ஆசிரியர், திருமலை) ஆகியோரின் மாமியாரும், சாந்தியின் வளர்ப்புத் தாயாரும், சபாநாதன் (கொழும்பு), திருமதி ஸ்ரெலா பாலசிங்கம், திருமதி அஞ்சலா ரவீந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சிவலிங்கம் விசி சுபத்திரா.
(மகள்)

32, 5 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(51435)

## திருமதி கந்தசாமி நாகம்மா

(கனடா)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொத்தாவத்தை மயிலிட்டியை வசிப்பிடமாகவும, கனடாவை வாழிடமாகவும் கொண்ட கந்தசாமி நாகம்மா அவர்கள் கனடாவில் 97-11-15 ஆம் திகதி காலமாகிவிட்டார்.

இவர் சரவணை கந்தசாமியின் அன்பு மனைவியும், இந்திராதேவி (கனடா), ஞானேஸ்வரி (லதா), மாலாதேவி (கொழும்பு), சிறிபாஸ்கரன் (கனடா), தனம் (கனடா), சிறீதரன் (கனடா), உமாபதி (கனடா), ஜெயந்தன் (கனடா), பவா (கனடா), ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேந்திரராசா, ஞானப்பிரகாசம் ஆகியோரின் அன்பு மாமியாரும் செல்லபாக்கியம், நவரத்தினம், கந்தசாமி, சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மூ கந்தசாமி (இளி. சகோதரன்)

வரியப்புலம்,
சுன்னாகம்.

(51437)

## சு. வின்சன்ற் டி போல்
## (S. VINCENT DE PAUL)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாம்பிள்ளை வின்சன் டிபோல் (பரிகாரியார்) 27-11-97 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற றோசமுத்துவின் அன்புக் கணவரும், அருட்சகோதரி மேரி யோசப்பின் (செபமாலைத்தாசர் சபை, அச்சுவேலி) திரு யோசப், அருட்சகோதரி பெற்றோனில்லா (திருக்குடும்பக் கன்னியர்மடம் இளவாலை) காலஞ்சென்ற ஆசிரியை மேரி திரேசா கில்டா, காலஞ்சென்ற ஆசிரியை திருமதி கிறேஸ் அருளானந்தம், அருட்சகோதரி மேரி நிசற்றா (திருக்குடும்ப மாகாண இல்லம்) போல் சாமிநாதன் (துரை - கோடைக்கானல்), திருமதி மரிஸ்ரெல்லா செல்வராஜா, திருமதி அலோசியா ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி கில்டா சோசவ், திருமதி றஞ்சி சாமிநாதர், அன்ரன் செல்வராஜா (இளைப்பாறிய தபால் அதிபர், ICRC யாழ்ப்பாணம்) காலஞ்சென்ற திரு. செ. அருளானந்தம் ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி வுளொறிடா அத்தனாசியார், றஞ்சன், திருமதி சேர்ளி மேவின், திருமதி விவேவியா போல் ஜென்சன் ஜெனிஸ், திருமதி ஐக்குலின், துஷ்யந்தன், றதினி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ் சென்ற முன்னாள் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் அருட்திரு A.S யோசவ் அடிகளாரின் (அ.ம.தி) சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 28-11-97 இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் காலை 11 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்:
செ. அன்ரன் செல்வராஜா
(மருமகன்)

124, ஆடியபாதம் வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

(51443)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மாற்றம் தேவை

ஈ·ரோஸ் அமைப்பின் பிரமுகர் சுதா மாஸ்டர் அரசின் அரசியல் தீர்வு தொடர்பாக வெளியிட்டுள்ள கருத்து, தமிழ் மக்களின் அனேகரின் கவனத்தை ஈர்த்திருப்பதனை அவதானிக்க முடிகிறது.

தமிழர் துயரங்களுக்கு தமிழ்க் கட்சிகளால் எவ்வித தீர்வையும் வழங்க முடியவில்லை. ஜனநாயக வழிக்குத் திரும்பிய எமது அமைப்பு உட்பட்ட எந்த ஒரு தமிழ் அமைப்பினாலும் இதுவரை எதனையும் சாதிக்க முடியவில்லை—

அரசியல் கட்சியாகப் பதிவு செய்து பத்து வருடங்கள் ஆகின்றன. நான்கு ஜனாதிபதிகளைக் கண்டுவிட்டோம். தமிழ் அமைப்புகளைச் சேர்ந்த 17 எம்.பிக்கள் நாடாளுமன்றத்தில் உள்ளனர். இவர்களால் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடிந்ததா?—

இன்னும் எவ்வளவு காலம் இப்படித் தமிழ் அமைப்புகள் காலத்தைக் கழிக்கப் போகின்றன? இறுதியில் இது ஒரு வரலாற்றுத் துரோகமாகவே அமையும்.—

அனைத்துத் தமிழ் அமைப்புகளும் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் துயரங்களுக்கு ஒரு முடிவுகாண முடியாவிடில், விடுதலைப் புலிகளே தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதனை ஏற்றுக்கொண்டு விலகிக் கொள்ள வேண்டியதுதான்.— என்று அவர் தெரிவித்துள்ளார்.

தமிழர்கள் ஒரு தனித்துவமான இனத்தினர் என்ற வகையில் தமக்குரிய உரிமைகளை இன்னும் அனுபவிக்க முடியவில்லை. இன்று மட்டும் அல்ல, கடந்த ஐந்து தசாப்தங்களாகவே தமிழர்கள் தமக்குச் சேர வேண்டிய உரிமைகளை கேட்டுப் போராடியும் அவை கிடைக்கவில்லை. தமிழ்த் தலைவர்களிடையே ஒற்றுமை இல்லாததால் அவர்கள் ஏமாற்றப்பட்டார்கள் அதனால் இப்போது துன்பங்களையும், துயரங்களையும் அனுபவிப்பவர்கள் மக்களே.

முன்னைய அனுபவம் இருந்தும் அதில் இருந்து பாடம் படிக்கத் தவறுவது பெரும் குற்றமாகவே கருதப்பட வேண்டும். அரசியல் என்பது சின்னப் பிள்ளை விளையாட்டு அல்ல. அதுவும் தமிழர்களின் உரிமைப்பிரச்சினை இலகுவான விடயமல்ல. ஐம்பது வருடங்களாக ஊறி, உறைந்து, இறுகிப் போயுள்ள விடயம்.

நியாயத்தைப் புரிந்து கொள்ளவும் உண்மையை உணர்ந்து கொள்ளவும் மறுக்கும் ஒரு தரப்பிடமிருந்து உரிமையைப் பெற்றாக வேண்டிய பெரும் பொறுப்பு தமிழ்க் கட்சிகளின், அமைப்புகளின் தலைவர்களுக்கு உண்டு.

எல்லோரும் இணைந்து தான், ஒரே குரலில் பேசித் தான், ஒரே வழியில் திசை மாறாமல் நடந்து தான் அந்தப் பொறுப்பை நிறைவேற்றலாம். தமிழர்கள் பல தலைமைகளின் கீழ் பிளவுபட்டு நிற்பது கொழும்பு அரசுகளுக்கு எப்போதும் பெரும் பலமாகிவிடுகிறது.

தமிழர்களின் பலவீனத்தைக் கொழும்பு அரசுகள் தமக்குப் பலமாக்கிக் கொண்டது தான் வரலாறு. அதில் ஒரு மாற்றம் வேண்டும். மாற்றத்தைக் கொண்டுவர வேண்டியவர்கள் தமிழர்களே; தமிழ்க் கட்சிகளின் தலைவர்களே.

தமிழர்களின் ஒற்றுமையின்மை என்ற பலவீனம், அரசாங்கங்களின் பலமாக இருக்கும் வரை தமிழர்களின் வாழ்க்கை நிலையும், உரிமை பெறுதலும் இயலாத காரியமாகிவிடும்.

# தமிழ் மக்களின் அபிலாஷை...

(முதலாம் பக்கத் தொடர்)

மக்கள் விடுதலை என்றஒரு மகத்தான இலட்சியத்தை வகுத்து, அந்த இலட்சியத்துக்காக வாழ்ந்து, அதனை அடைய உறுதி தளராது அந்த இலட்சியப் போரில் தமது உயிரை அர்ப்பணித்த மாவீரர்கள் மகோன்னதமான மனிதப் பிறவிகள். மாவீரர்களை புனிதர்களாக நான் கௌரவிக்கின்றேன்.

தாய் நாட்டின் விடுதலை என்ற புதுமையான பற்றுணர்வால் ஈர்க்கப்படும் அவர்கள் தமது தனிமையான பற்றுக்களையும் பாச உணர்வுகளையும் துறந்து விடுகிறார்கள். சுய வாழ்வின் சுக போகங்களைக் கைவிட்டு, பொது வாழ்வின் அதியுயர் விழுமியத்தை தழுவிக்கொள்கின்றார்கள்.

அந்த பொதுவான இலட்சியத்துக்காக தமது சொந்த வாழ்வையும் அர்ப்பணிக்க துணிகிறார்கள். இதனை ஒரு புனிதமான துறவறமாகவே நான் கருதுகின்றேன். இந்தப் புனித துறவறத்துக்கு இலக்கணமாக விளங்கும் மாவீரர்களை நாம் புனிதர்களாகவே பூசிக்க வேண்டும்.

### தம்மையே அழிக்கும் உன்னத தியாகிகள்

தன்னலமற்ற—தமக்கு என பலனை எதிர்பாராத — விடுதலைத் தொண்டில் தம்மையே அழித்துக் கொள்ளும் அதி உன்னத தியாகி என்பதால் மாவீரர்களுக்கு எமது விடுதலை இயக்கம் பெருமதிப்பு, கௌரவம் வழங்கி வருகின்றது.

மாவீரர்களை எமது இன விடுதலைப் போரில் வரலாற்று நாயகர்களாக— தேசிய வீரர்களாக — நாம் போற்றுகின்றோம்.

அவர்கள் நினைவுகள் காலத்தால் கரைந்து போகாமல் என்றும் எமது நெஞ்சங்களில் நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காக நாம் அவர்களுக்கு நினைவு விழாக்கள் எடுக்கின்றோம்; நினைவுச் சின்னங்களை நிறுவி கௌரவிக்கின்றோம்.

வீரவணக்க கடன்களுடன் மாவீரர்களின் வித்துடல்களை விதைப்பதும் நினைவுக் கல் நடுவதும் அவர்களது கல்லறைகளை புனிதச் சின்னங்களாக பூசிப்பதும், அவர்களது துயிலும் இல்லங்களை புனித தலங்களாக வழிபடுவதும் எமது மக்களால் விரும்பப்படும் வழக்காகி விட்டது. மாவீரர்களின் நினைவாக ஒரு வீர வழிபாட்டு மரபு எமது மண்ணில் உருவாகியிருக்கின்றது என்பதை நான் பெருமித்துடன் சொல்வேன்.

### விடுதலை எழுச்சிக்கு உந்து சக்தி

மாவீரர்களை வணக்கத்துக்குரியோர்களாக கௌரவிக்கும் எமது வீர மரபு தமிழரின் எதிரியான சிங்கள இனவாத அரசுக்கு எரிச்சலையூட்டியிருக்கின்றது.

சிங்கள தேசம் யாரை பயங்கரவாதிகளாக இழிவுபடுத்தி வந்ததோ, அவர்களை தமிழர் தேசம் புனிதர்களாக பூசிப்பதை பேரினவாதிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

அத்தோடு மாவீரரின் வீர வழிபாட்டு மரபானது தமிழினத்தின் விடுதலை எழுச்சிக்கு உந்து சக்தியாக இருந்து வருவதாகவும், சிங்கள ஆட்சியாளர்கள் கருதினர். இத்தகைய இனத்துவேச பகையுணர்வால் உந்தப்பட்ட சிங்கள பேரினவாதம், தமிழினத்தால் என்றுமே மன்னிக்க முடியாததொரு படுபாதகச் செயலில் இறங்கியது.

யாழ்ப்பாண குடாநாடு எதிரிப்படைகளின் பிடியில் வீழ்ந்த போது இந்த வேதனைக்குரிய சம்பவம் நிகழ்ந்தது. தமிழீழத் [illegible] யில் நித்திய உறக்கத்தில் ஆழ்ந்திருந்த எமது மாவீரர்களின் ஆன்ம அமைதி எதிரியால் குலைக்கப்பட்டது. அவர்களது கல்லறைகள் இடித்து தரை மட்டமாக்கப்பட்டன. அவர்களது துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டன. அவர்களது நினைவுச் சின்னங்கள் சிதைக்கப்பட்டன. புனிதர்களாக, சரித்திர நாயகர்களாக, தேசிய வீரர்களாக தமிழர்களினால் போற்றி பூசிக்கப்படும் மாவீரர்களின் புதைகுழிகளை மாசுபடுத்தி அவர்களது புனித தலங்களான துயிலும் இல்லங்களை சிதைத்தழித்த இச்செயலை மிகவும் அநாகரிகமான-கீழ்த்தரமான - இழி செயலென்றே நான் கூறுவேன்.

ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அடாவடித்தனம் என இச்செயலை சிறுமைப்படுத்தி விடமுடியாது. இது மிகவும் பாரதூரமான பயங்கரவாதச் செயல். தமிழினத்தின் தேசிய ஆன்மாவில் நீங்காத கறையை ஏற்படுத்திய இந்த அவச்செயலுக்கு சிங்களப் பேரினவாத அரசே பொறுப்பேற்க வேண்டும்.

இந்த பண்பற்ற செயல் ஓர் உண்மையை பகர்கின்றது. அதாவது சிங்கள தேசத்தை ஆண்டு வரும் இனவாத ஆட்சியாளர்கள் தமிழர்களின் உணர்வுகளுக்கு என்றுமே மதிப்பளிக்கப் போவதில்லை. அத்துடன் தமிழர்களின் தேசிய அபிலாஷைகளை புரிந்து அவர்களுக்கு நீதியும் வழங்கப்போவதில்லை. இறந்து போனோரின் அமைதியையே கெடுப்பவர்கள் இறவாதோருக்கு நிம்மதியை கொடுப்பார்கள் என நான் கருதவில்லை.

எனது அன்பார்ந்தமக்களே!

இலங்கைத் தீவின் ஆட்சி அதிகாரம் சிங்கள பெரும்பான்மை மக்களிடம் ஒப்படைக்கப்பட்டு 50 ஆண்டுகளாகின்றன. இந்த அரை நூற்றாண்டு காலமாக மாறி மாறி அதிகார பீடத்தில் ஏறிய சிங்கள இனவாதக் கட்சிகள் ஈழத்தமிழினத்தின் துயர் துடைக்க இதுவரை செய்தது என்ன?

### வரலாறுகண்ட உண்மை என்ன?

தமிழர்களின் நியாயமான கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்பட்டனவா? தீப்பற்றி எரியும் தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டதா? ஒன்றுமே நடக்கவில்லை. மாறாக இந்த நீண்டகால விரிப்பில் தமிழர்கள் மீது துன்பத்தின் மேல் துன்பமாக தாங்கொணாதுயரப் பளு மட்டுமே சுமத்தப்பட்டு வந்தது.

தமிழரின் நிலத்தை அபகரித்து, தமிழரின் மொழியைப் புறக்கணித்து, தமிழரின் கல்வி — வேலை வாய்ப்பு உரிமைகளைமறுந்து தமிழரின் தேசிய வளங்களை அழித்து தமிழர்களின் சமூக — பொருளாதார வாழ்வை சீரழித்து, தமிழர்களை பெரும் எண்ணிக்கையில் கொன்றொழித்து தமிழினத்தை இனவாரியாக ஒழித்துக் கட்டுவதில்தான் சிங்கள அரசுகள் முனைப்புடன் செயற்பட்டன. இது தான் வரலாற்று உண்மை.

### சந்திரிகாவின் ஆட்சிக்காலம்

சிங்களத்தின் ஒடுக்குமுறை வரலாற்றில் சந்திரிகாவின் ஆட்சிக்காலம்தான் தமிழினத்துக்கு சாபக்கேடாக அமைந்தது. இந்த மூன்று ஆண்டு காலத்தில் அவலத்துக்கும், இம்சைக்கும் ஆளாகாத தமிழர்களே இல்லை எனலாம்.

சந்திரிகாவின் ஆட்சியில் தான் போர் விரிவடைந்து பெரும் தியாகப்பரவி, தமிழர் தேசத்தை சுட்டெரித்தது. இதனால் ஜன சமுத்திரமாக மக்கள் இடம் பெயர்ந்து, இருப்பிடமின்றி அவலப்பட்ட [illegible] பாரம்பரிய நிலங்கள் இராணுவ அடக்குமுறைஆட்சிக்கு உட்பட்டன. மாறி மாறி நிகழ்ந்த படையெடுப்புகளோடு உணவு, மருந்து தடைகளையும் அரசு இறுக்கி வந்ததால் பசியும், பட்டினியும், நோயும், சாவுமாக தமிழ் மக்கள் சந்தித்த இன்னல்களை சொல்லில் விபரிப்பது கடினம்.

ஐம்பது ஆண்டு காலமாக முடிவின்றி நீண்டு செல்லும் சிங்கள பேரினவாதத்தின் ஒடுக்கு முறையானது சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் தான் மிகவும் தீவிரமான கடும் போக்கை எடுத்தது எனலாம்.

தமிழரின் தேசிய சுதந்திர இயக்கமாகிய விடுதலைப் புலிகளை நசுக்கி தமிழினத்தை சிங்கள இராணுவ ஆட்சியின் கீழ் அடிமைப்படுத்துவது தான் அரசின் அடிப்படையான நோக்கம், இந்த இராணுவத் தீர்வை நடைமுறைப் படுத்துவதில்தான் முழு முனைப்போடு செயல்பட்டு வருகின்றது சந்திரிகா அரசு.

### பிரசார மாயையில் உலக நாடுகள்

தனது பாரிய இராணுவத் திட்டத்தையும், அதன் விளைவாக தமிழர்களுக்கு ஏற்பட்டு வரும் பேரவலங்களையும் மூடி மறைத்து உலகத்தின் கவனத்தைத் திசை திருப்பும் நோக்கில் சந்திரிகா அரசானது தீர்வுப் பொதி என்ற நாடகத்தை அரங்கேற்றியது. இந்த அரசியல் நாடகத்தின் சூட்சுமத்தை உலக நாடுகள் புரிந்து கொள்ளவில்லை.

சந்திரிகாவின் தீர்வுப்பொதியானது இராணுவத் தீர்வுத் திட்டத்தின் மறுமுகம் என்பதை உலகம் கண்டுகொள்ளவில்லை. மாறாக சிங்கள அரசின் சாணக்கியமான பிரசார மாயையில் மயங்கி உலக நாடுகள் சந்திரிகாவின் தீர்வுப் பொதிக்கு கண்மூடித்தனமாக ஆதரவு வழங்கின.

சிங்கள பௌத்த பேரினவாதத்தின் தமிழ்த் துவேச போக்கினால் தமிழர் முகம் கொடுத்த கசப்பான வரலாற்று அனுபவத்தை கருத்தில் கொளளாது, அவசரப்பட்டு உலக நாடுகள் எடுத்த இம்முடிவு எமக்கு ஒரு புறம் வியப்பையும் மறுபுறம் ஏமாற்றத்தையும் கொடுத்தது.

சர்வதேச உலகம் சந்திரிகாவின் சார்பாக திரும்பியதால் துன்பம் தோய்ந்த தமிழரின் அவலக்குரல் உலகத்தின் மன்சாட்சியை உறுத்தவில்லை.

சந்திரிகாவின் தீர்வுப் பொதி, தமிழர்களின் அடிப்படையான தேசிய அபிலாஷைகள் எதையும் தொட்டு நிற்கவில்லை, காலத்திற்குக் காலம் தேய்ந்து தேய்ந்து உள்ளடக்கம் உருக்குலைந்து வரும் இத்தீர்வுத்திட்டம் இரண்டரை வருடங்களாக இழுபட்டும் இன்னும் முழுமை பெறவில்லை. எனினும் இத்திட்டத்தின் நோக்கம் தெளிவாகத் தெரிகின்றது. தமிழரின் தேசிய தனித்துவத்தையும் தாயகத்தையும் மறுதலித்து தமிழர் தேசத்தை சிங்கள இறையாட்சியின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவருவதுதான் இதன் குறிக்கோள்; இராணுவத் தீர்வின் நோக்கமும் இது தான்.

எனவே சந்திரிகாவின் அரசியல் பொதியும் இராணுவத் திட்டமும் ஒரே நாணயத்தின் இரு முகங்களாகவே எமக்குத் தெரிகின்றன. தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை நீதியான முறையில்- சமாதான வழியில்— தீர்த்து வைப்பதற்கான அரசியல் நேர்மையும் உறுதியும் சந்திரிகா அரசிடம் இல்லை. தமிழரின் தேசிய அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையில் ஓர் உருப்படியான தீர்வுத்திட்டத்தை முன்வைக்கவும் சந்திரிகாவிடம் துணிவில்லை.

இந்த இயலாமையை நியாயப்படுத்த தீவிர பேரினவாத சக்திகள் மீது பழியை சுமத்த முனைகின்றது அரசு.

### பேரினவாதத்தின் ஒரு வடிவமே அரசு

சந்திரிகா அரசும் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் ஒரு வடிவம் தான். சிங்கள பௌத்த பேரினவாதத்தைக் கட்டிஎழுப்பிஅதனைபூதாகரமாக வளர்த்துவிட்ட சந்திரிகாவின் அரசியல் கட்சி. இப்போது அந்த தீவிரவாத சக்திகள் மீது குறை கூறுவது அபத்தமானது.

விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதான வழியில் அரசியல் தீர்வை விரும்பவில்லை என சந்திரிகா அரசு கூறுவதிலும் உண்மை இல்லை. நாம் சமாதான வழியில் அரசியல் தீர்வை விரும்பியதால் தான் நாம் திம்பு தொடக்கம் யாழ்ப்பாணம் வரை பல பேச்சுகளில் கலந்து கொண்டோம்.

இப் பேச்சுகளின் போது நாம் தமிழினத்தின் நலனில் உறுதியாக நின்றோம். சிங்கள அரசுகள் தமிழ் மக்களுக்கு நீதி வழங்க மறுத்தன. இதனால் பேச்சுக்கள் வெற்றி பெறவில்லை. இதற்கு எம் மீது குறை கூறிப் பயன் இல்லை.

சிங்கள அரசுகளின் விட்டுக்கொடாத போக்குகள்தான் இந்நிலைமைக்கு காரணம். தமிழரின் தாயகம், தமிழரின் தேசியம், தமிழரின் தன்னாட்சி உரிமை ஆகியவற்றை அங்கீகரித்து அவற்றின் அடிப்படையில் ஓர்அரசியல் தீர்வுத் திட்டம் வகுக்கப்படவேண்டும் என நாம் திம்பு காலத்திலிருந்து வலியுறுத்தி வருகின்றோம். இதுவே இன்றும் எமது நிலைப்பாடாக இருந்து வருகின்றது.

எந்தவொரு அரயசில் தீர்வுத்திட்டத்திற்கும் தமிழரின் தாயகம் அடிப்படையானது. தமிழரின் நிலமானது தமிழரின் தேசிய வாழ்விற்கும், தேசிய தனித்துவத்திற்கும் ஆதாரமானது.

தமிழர்கள் வரலாற்று ரீதியாக வாழ்ந்துவரும் தாயக நிலத்தை அங்கீகரிக்காத எந்தவொரு திட்டமும் தமிழரின் தேசிய பிரச்சினைக்கு தீர்வாக அமையாது.

தமிழரின் வரலாற்றுச் சொத்தான தாயக நிலத்தையே ஏற்றுக்கொள்ளத் தயங்கும் இன்றைய சிங்கள அரசியல்வாதிகள், திம்பு கோட்பாடுகள் அடிப்படையில் ஒரு தீர்வுத் திட்டத்தை தமிழருக்கு வழங்குவார்களா என்பது கேள்விக்குரியது.

தென்னிலங்கை அரசியல் உலகில் சிங்கள பௌத்த பேரினவாத சிந்தனை ஆதிக்கம் செலுத்தும்வரை இது சாத்தியமாகப்போவதில்லை.

இந்த உண்மையை உணர்ந்து கொண்டுள்ளமையால்தான் 20 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழீழ மக்கள் தன்னாட்சி உரிமையைப் பிரகடனம் செய்து, தனி அரசு அமைக்க முடிவு எடுத்தனர்.

தமிழ் மக்களின் இத் தேசிய அபிலாஷையை இலட்சியமாக வரித்தே கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக எமது விடுதலை இயக்கம் தன்னாட்சி உரிமையை நிலைநாட்டப் போராடி வருகின்றது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

**கார்த்திகை 14**
சனிக்கிழமை
திதி: சதுர்த்தசி
காலை 7.43 வரை.
நட்சத்திரம்: விசாகம்
பிற்பகல் 12.24 வரை.
அமாவாசை விரதம்
சுபநேரம்: 3.13-4.43
ராகுகாலம்: 9.13-10.43
(பகலுக்கும் இரவுக்கும் வழமை நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோர்...

(முதலாம் பக்கத் தொடர்)
ஸ்ரீலங்கா அரசின் பதில்'' என்ற தலைப்பில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. அதன் சுருக்கம் வருமாறு:-

1996 நடுப்பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பின்னர் சுமார் 540 பேர் காணாமற் போயினர். 1997 ஒகஸ்ட்டில் இந்தப் பிரதேசத்துக்கு விஜயம் செய்த சர்வதேச மன்னிப்புச் சபைக் குழு கண்டு கொண்ட சாட்சியங்களை இந்த ஆவணம் முன்வைக்கிறது.

இவர்களில் அநேகமாக அனைவரும் தடுப்புக்காவலில் இருந்த சமயம் சித்திரவதை காரணமாக கொல்லப்பட்டனர்; அல்லது படுகொலை செய்யப்பட்டனர்.

நாட்டின் வடக்கு-கிழக்கில் சுதந்திரமான அரசு ஒன்றை அமைப்பதற்காக போராடி வரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள்தங்கள் மீது தாக்குதல் நடத்தும்போது—முன்னைய காலங்களில் செய்தது போன்று—பதிலடியாக பரந்தளவில் காணாமற்போகச் செய்யும் நடவடிக்கையை பாதுகாப்பு படைகள் நாடியுள்ளன.

இத்தகைய தாக்குதல்களின் பின்னர் 'காணாமற்போனமை' அதிகளவில்இடம் பெற்றது 1996 ஜூலை மற்றும் ஒகஸ்ட் மாதங்களில் ஆகும். (முறையே 190 மற்றும் 143).

யாழ்ப்பாணத்தில் இராணுவ சோதனை நிலையங்களா இராணுவ அணிகள் போன்றவற்றின் மீதானதாக்குதலின்போது வகைதொகையின்றிப் பொது மக்களைக் கொல்வது, இராணுவத்துக்கு தகவல் கொடுப்போர் என அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளின் இலட்சியத்துக்கு எதிரான ''துரோகிகள்'' எனச் சந்தேகிக்கப்படுவோரை கேள்வி முறையின்றி மரண தண்டனைக்கு உட்படுத்துதல் போன்றவை உட்பட மனித உரிமை துஷ்பிரயோகங்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்களும் பொறுப்பாக இருந்துள்ளனர்.

இவ்வாறு 'காணாமற் போகச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான அனுமதி ஸ்ரீலங்காவின் அரசியல் தலைமைத்துவத்தினால் வழங்கப்பட்டது என்று கூறுவதற்கு எந்த ஆதாரமும் இல்லை ஆனால் தனது நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட பொதுமக்களின் உயிர்களைப் பாதுகாக்கத் தவறியதற்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கின்றது என்பதை கொழும்பில் உள்ள அரசாங்க அதிகாரிகள் உணர்ந்து ஏற்றுக் கொள்வதற்கு முன்னரே அங்கு சுமார் 600 பேர் காணாமற் போய்விட்டதாக அறிவிக்கப்பட்டது. மேலும் பல நூற்றுக்கணக்கானோர் பாதுகாப்புப் படையினரின் சித்திரவதைக்கு ஆளானார்கள். இராணுவத்தின் உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட கற்பழிப்புக்கள் குறித்தும் பல அறிக்கைகள் உள்ளன.

'காணாமற் போதல்' என்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் எடுத்த பல நடவடிக்கைகள் பற்றியும் அறிவிக்கப்பட்டுள்ளது; காணாமற் போன சிலர் கண்டுபிடிக்கப்பட்டும் உள்ளனர். என்றாலும் காணாமற்போனது பற்றிய அறிவிப்புக்கள் தொடர்ந்து கிடைத்த வண்ணம் உள்ளன.

உதாரணமாக 1997 இல் முதல் அரை ஆண்டில் யாழ்ப்பாணத்தில் 41 காணாமற் போனோர் தொடர்பான சம்பவங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன; அதில் நால்வரை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சினால் அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவினாலும், இராணுவப் பொலீஸாரின் விசேட விசாரணைப் பிரிவினாலும் காணாமற்போன சுமார் 600 பேர் பற்றிய விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் வெளிவிவகார அமைச்சின் தகவலின்படி, புதிதாக உருவாக்கப்பட்ட மனித உரிமை ஆணைக்குழு 274 சம்பவங்கள் குறித்து விசாரிக்கின்றது.

இந்தப் பிரச்சினைக்கு அடிப்படைவேரை கண்டுபிடித்து தீர்க்கும் வரை கொடூரமான அடிப்படை மனித உரிமை மீறல்கள் — குறிப்பாகக் காணாமல் போதல் — இலங்கையில் தொடர்ந்து பெருமளவில் நிகழும் என்பதை கடந்த வருடங்களின் அனுபவங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

ஆள்களை வெளித்தொடர்பின்றி நீண்ட காலத்துக்குத் தடுத்து வைக்க அதிகாரமளிக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் குற்றமிழைப்போருக்குத் தண்டனையில் இருந்து விலக்களித்து மேலும் அதிக கட்டுப்பாடற்ற அதிகாரத்தை வழங்கும் அவசர காலச் சட்ட விதிகள் ஆகியவையே இப்தப்பிரச்சினைக்கு வேரான அடிப்படைக் காரணங்களாகும்.

மனித உரிமைகளை திட்டமிட்ட முறையில் பேணிப் பாதுகாப்பதாகத் தான் வழங்கிய உறுதி மொழியை அரசாங்கம் பின்பற்றுகிறதா என்பதை அவதானிப்பதற்குச் சர்வதேச சமூகம் காத்திருக்கின்றது —என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

# மாவீரர்...

(முதலாம் பக்கத் தொடர்)
வுப் பொறுப்பாளர் நிலா—அலம்பிலில் உள்ள மாவீரர் துயிலுமில்லத்தில் கடற் புலிகள் தளபதி கங்கை அமரன்—ஆகியோர் ஈகைச் சுடர் ஏற்றியதாக ''புலிகளின் குரல்'' மேலும் தெரிவித்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிச்சோலை, வெல்லாவெளி, வவுணதீவு, வாகரை, செங்கலடி பிரதேச செயலகப் பிரிவுகளில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வுகளில் சுமார் 25 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.

கொக்கட்டிச்சோலையில் இடம்பெற்ற பிரதான நிகழ்வுக்கு மட்டக்களப்பு — அம்பாறை பிராந்திய அரசியல் பொறுப்பாளர் கீதன் தலைமை வகித்தார்.

# தமிழ்மக்களின்...

(ஏழாம் பக்கத் தொடர்)
தமிழர்களின் உரிமைகளையும் பறித்து, தமிழர்களுக்கு ஒரு நீதியான தீர்வு வழங்கவும் மறுத்து, தமிழர்கள் பிரிந்து சென்று தனியரசு அமைப்பதையும் எதிர்த்து எல்லா வழிகளிலும் சமாதானப் பாதைக்கு இடையூறாக நிற்பது சிங்கள பேரினவாதிகளே அன்றி நாம் அல்லர்.

கடந்த 50 ஆண்டுகளாக அடக்குமுறை என்றஒரேவழியில் தான் சிங்களம் சென்று கொண்டிருக்கின்றது. இந்தக் குருட்டுத்தனமான அணுகுமுறையினால்தான் இலங்கையில் அமைதி குலைந்து போரும் வன்முறையும் தலைதூக்கி நிற்கின்றன.

இந்த அணுகு முறையை சிங்கள தேசம் மாற்றிக் கொள்ளாவிடின் முடிவில்லா யுத்தத்தையும், பேரழிவையும் அது சந்திக்கவேண்டி வரும். இந்த அழிவுப் பாதையை தேர்ந்தெடுத்து நிற்பது சிங்கள பேரினவாதிகளே அன்றி நாம் அல்லர்.

இராணுவ அடக்கு முறைக் கொள்கையால் சிங்கள தேசம் தன்னைத்தானே அழித்துக் கொண்டிருக்கின்றதே தவிர. தமிழினத்தின் சுதந்திர எழுச்சியை அதனால் அழித்துவிடமுடியாது. இந்த உண்மையை சிங்களப் பேரினவாதம் என்றோ ஒரு நாள் உணர்ந்தே தீரும்.

ஆயினும் இராணுவ வன்முறைப் பாதையைக் கைவிட்டு, சிங்களம் தமிழ்மக்களுக்கு நீதி வழங்கும் என நாம் எதிர்பார்க்கவில்லை அந்த எதிர்பார்ப்புடன் நாம் எமது விடுதலைப் போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை.

தேச விடுதலை என்பது எதிரியால் வழங்கப்படும் சலுகை அல்ல. அது இரத்தம் சிந்தி, உயிர் விலைகொடுத்து, போராடி, பெறவேண்டிய புனித உரிமை.

எனவே நாம் எமது விடுதலை இலட்சியத்தை அடைய தொடர்ந்து போராடுவோம்; இத்தனைகாலமும் நாம் சிந்திய இரத்தமும், செய்த உயிர் தியாகங்களும் வீண்போகா என்ற திடமான நம்பிக்கையுடன் நாம் தொடர்ந்து போராடுவோம்.

எமது புனித மண்ணை தமது ஆக்கிரமிப்புப் பாதங்களால் அசிங்கப்படுத்தி நிற்கும் எதிரிப் படைகளை எமது மண்ணிலிருந்து விரட்டி அடிப்போம் என்ற திடசங்கற்பத்துடன் நாம் தொடர்ந்து போராடுவோம்.

உறுதியுடன் போராடும் தேசமே இறுதியில் வெற்றி பெறும் என்ற உண்மையை எமது நெஞ்சில் நிறுத்தி நாம் செயல் உறுதியுடன் போராடுவோம்.

மனவலிமை நெருப்பாக எரிந்து, எமது மண்ணின் விடுதலைக்காக களமாடி வீழ்ந்த மாவீரர்களை நினைவு கூர்ந்து, நாம் இலட்சிய உறுதியுடன் தொடர்ந்து போராடுவோம் — என்று தெரிவித்துள்ளார். (உ-21)

# பூநகரி நோக்கிப் பீரங்கித் தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 28
யாழ். நகரை அண்டிய பிரதேசத்திலிருந்து பூநகரிப் பகுதியை நோக்கி நேற்றிரவு 9.30 மணியளவில் பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது. நகரை அண்டிய கடற்பிரதேசத்தின் மீது பரா லைட் வெளிச்சமும் ஏவிவிடப்பட்டது.

# பத்திரிகைச் சுதந்திரம்...

நான் 51 ஆவது படையணித் தளபதியாகப் பதவியேற்ற ஒரு வாரத்தில் யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தரைச் சந்தித்துப்பேசினேன்.

புலிகளின் கட்டுப்பாட்டில் இந்தப் பிரதேசம் இருந்த காலத்திலும், யாழ். பல்கலைக் கழகம் சுயாதீனமாக இயங்கியது என்று கூறப்பட்டது. அதே நிலை தொடர வேண்டும்; பல்கலைக்கழகம் சுயாதீனமாகச் செயற்பட வேண்டும் என்ற என் விருப்பத்தை அப்போது துணை வேந்தரிடம் கூறியிருந்தேன்.

யாழ். பல்கலைக்கழகத்தின் உறுப்பினர்கள் — அவர்கள் அலுவலர்களாக இருந்தாலும், மாணவர்களாக இருந்தாலும்—கைது செய்யப்பட வேண்டிய தேவை ஏற்பட்டால் அது குறித்து முன்கூட்டியே பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு அறிவிக்கப்படும் என நாம் இணக்கம் கண்டிருந்தோம்.

என்றாலும் தடைசெய்யப்பட்ட பொருளை வைத்திருத்தல், நேரடியாகக் குற்றம் இழைக்கப்படும் இடத்தில் கைது செய்யப்பட வேண்டிய நிர்ப்பந்தம் போன்றவற்றின் போது இத்தகைய நடைமுறையைப் பின்பற்ற முடியாமல் போகும் என்றும் நான் அப்போது குறிப்பிட்டிருந்தேன்.

இன்று விடுதலை செய்யப்படும் இந்த இரு மாணவர்களும் ஆகக் குறைந்தது 'விடுதலைப் புலிகள் பற்றிய தகவல்களைத் தெரிந்திருந்தும் அதனை படையினருக்குத் தெரிவிக்கத் தவறினார்கள்' என்ற குற்றச்சாட்டையாவது இழைத்திருக்கின்றார்கள் என்பது உறுதி.

இதற்காக அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டால் சிறைத்தண்டனை விதிக்கப்படுவார்கள் என்பது நிச்சயம்.

எனினும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் நாம் சட்டப் புத்தகத்தின் பின்னால் போக வேண்டும் என்பதல்ல. ஏனைய படை அதிகாரிகளின் ஆலோசனைகளுடன் எனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த மாணவர்களை விடுவிக்கின்றேன். உரியசட்ட நடவடிக்கையை நாம் நாடியிருந்தால் இந்த மாணவர்கள் பெற்றோரின் — சமூகத்தின் — எதிர்பார்ப்பையும் எதிர்காலத்தையும் பாழக்கும் நிலைக்குப் போயிருப்பார்கள்.

பல்கலைக்கழக அடையாள அட்டைகளுக்கு சில இடங்களில் படையினர் உரிய மதிப்பு அளிப்பதில்லைஎன்று இந்த இரு மாணவர்களும் கூறுகின்றனர்.

புலிகளின் நடமாட்டம் இருந்த — அல்லது புலிகளின் செயற்பாடுகள் ஓரளவு உள்ள — மானிப்பாய், தாவடி, இணுவில், சண்டிலிப்பாய் போன்ற இடங்களில் — இத்தகைய நிலை நிலவுவதுஉண்மையே. அங்குள்ள நெருக்கடி காரணமாக சில வேளைகளில் படையினர் அப்படி நடந்து கொள்வது தவிர்க்க முடியாததே.

யாழ். பல்கலைக்கழகத்துக்கும் 'உதயன்' பத்திரிகைக்கும் இடையில் கசப்புணர்வு ஏற்பட்டதாக அண்மைக் காலத்தில் அறிந்தேன். அது வருத்தத்துக்குரியது.

ஜனநாயக நாட்டில் பத்திரிகைகளுக்கு கருத்துச் சுதந்திரம் உண்டு என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

'உதயன்' பத்திரிகை விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செய்திகளை வெளியிடுவதாக பலர் என்னிடம் வந்து கூறுகின்றார்கள் ஆனால் ஏனைய பத்திரிகைகள் போன்று சட்டத்துக்கு அமைவாக அவர்கள் செய்திவெளியிடும் போது அதை நாம் மதிக்கத்தான் வேண்டும் என்பதுதான் எனது கருத்து.

எங்களைப் பற்றி தவறான செய்திகள் வெளிவந்தால் நாம் அதனை மறுக்கலாம். அந்த மறுப்பை வெளியிட வேண்டிய தார்மீகக் கடப்பாடு பத்திரிகைகளுக்கு உண்டு.

'ராகிங்' ஒரு இழிவான செயல். அது தொடர்பாக 'உதயன்' தவறான செய்திகளை வெளியிட்டிருந்தால் அதனை ஜனநாயக முறையில் மறுப்பதே உகந்த வழி. இது எனது ஆலோசனையே தவிர, உத்தரவல்ல — என்றார்.

பதிலளித்துப் பேசிய துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இரு மாணவர்களையும் விடுவித்ததற்காக மேஜர் ஜெனரல் பலகல்லவுக்கு பல்கலைக்கழகத்தின் சார்பில் நன்றி கூறினார்.

யாழ். பல்கலைக்கழகத்துக்கும் 'உதயன்' பத்திரிகைக்கும் இடையில் கசப்புணர்வு ஏதும் இல்லை என்று குறிப்பிட்ட அவர் சில மாணவர்களின் தவறான செயற்பாடு திருத்தப்பட்டு விட்டது; நல்லுறவு பேணப்படுகின்றது என்றும் கூறினார். (உ)


## மரண அறிவித்தல்

### தம்பித்துரை பாக்கியநாதன்

(மிருதங்க வித்துவான்)

குருநகரைச் சேர்ந்த தம்பித்துரை பாக்கியநாதன் 27-11-97 அன்று காலமாகிவிட்டார்.

இவர் பாக்கியநாதன் லூர்த்துநாயகியின் அன்புக் கணவரும், அருள்தாஸ் திலகவதி (ஜேர்மனி), அகிலன், மாலா, கபிலன், நகுலன், எட்வேட் கொக்றல் (எழிலன் —யாழ். ப. நோ. கூ. ச. கிளை முகாமையாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28-11-97) மாலை 3-30 மணியளவில் நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

26 ஏ, பீச்றோட்,
குருநகர்.

(சி/2201)



குரும்பசிட்டி
## வளர்மதி சனசமூக நிலையம்
## 30 ஆவது ஆண்டு நிறைவு விழா
## கலாசாரப் போட்டிகள்

இடம்; வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்

காலம்: 1997-11-30 ஞாயிறு காலை 9.00 மணி

போட்டிகள்: கட்டுரை, கவிதை,
சிறுகதை, பேச்சு,
சுவரொட்டி, சித்திரம்

போட்டிகள் கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற் பிரிவுகளாக நடத்தப்படும். வலி-வடக்கு பிரதேச செயலர் பிரிவை வதிவிடமாகக் கொண்ட

ஆண்டு 05 முதல் 13 வரை கல்வி பயிலும்

ஆர்வமுள்ள மாணவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அ. சக்திவேல்
தலைவர்

து. கலியுகவரதன்
செயலாளர்

(சி/2198)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28-11-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org